## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | STC.164 of 2018 |
| Prosecution Witness | : | DW1 |

06.03.2025.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Srikanth Singh | Calling | : | Branch manager |
| Father Name | : Mohan prasath singh | Religion | : | |
| Village | : Bihar | Age | : | 44 |
| Taluk | : | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜரில்லை. மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வைரிசெட்டிபாளையம் IOB ல் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி ராஜா எங்களது வங்கியில் P.Raja MPS Agencies என்ற பெயரில் proprеriter வங்கி கணக்கு வைத்துள்ளார். மேற்படி வங்கி கணக்கு பங்குதாரர் என்ற பெயரில் இல்லை. **எதிரி நிறுவனத்தின் 2014 முதல் 2017 ம் ஆண்டிற்கான வங்கி கணக்கு அறிக்கை எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியின் MPS Agencies நடப்பு கணக்கு (Current Account) எங்களது வங்கியில் வைத்துள்ளார். மேற்படி நிறுவனத்தின் நிறுவனர் பெயர் P.Raja. ம.சா.ஆ.1 காசோலை MPS Agencies நிறுவனர் ராஜா அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காசோலை அழகுசாமி என்பவரால் எங்களது வங்கியில் பணமாக்க செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அழகுசாமி எங்களது வங்கியில் 11335 என்ற எண்ணில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார் என்றால் அழகுசாமி மற்றும் லதா என்ற பெயரில் மேற்படி கணக்கு எண்ணில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். மேற்படி காசோலை எதிரியின் வங்கி கணக்கில் 29.05.2017 செலுத்தப்பட்ட போது எவ்வளவு தொகை இருந்தது என்றால்

ரூ.7,00,000/- இருந்தது. எனவே மேற்படி காசோலை போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ரிட்டன் மெமோ எங்களது வங்கியால் 01.06.2017 அன்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி MPS Agencies வங்கி கணக்கு நடப்பில் உள்ளது.

(சாட்சிக்கு தமிழ் தெரியாததால், கேள்விகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு சாட்சியிடம் கேட்கப்பட்டது. மேற்படி சாட்சியம் சாட்சிக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, படித்து காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்